22.06.2018 - 01.45

திருச்சிராப்பள்ளி

மாநிலச் செய்திகள்

## தலைப்புச்செய்திகள்:

- நாட்டின் நான்காவது தொழில் புரட்சிக்கு டிஜிட்டல் தொழில்நுட்பமே அடித்தளம் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியிருக்கிறார்.
- தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை இன்று பார்வையிட்டு வருகிறார்.
- தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டில், கோ ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை இலக்கு 340 கோடி ரூபாய் அளவிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில கைத்தறி துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் தெரிவித்துள்ளார்.
- சேலம் பசுமை வழிச்சாலை திட்டத்திற்கு நிலம் வழங்குவோருக்கு ஹெக்டேருக்கு அதிகபட்சமாக 9 கோடியே 40 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்.

..........

பிரதமர்:

நாட்டின் நான்காவது தொழில் புரட்சிக்கு டிஜிட்டல் தொழில்நுட்பமே அடித்தளம் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியிருக்கிறார். புதுதில்லியில் வர்த்தக அமைச்சகத்தின் புதிய வளாக அலுவலக கட்டிடத்திற்கான அடிக்கல்லை இன்று நாட்டி பேசிய அவர், உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 3.4 சதவீத அளவிற்கு இரட்டிப்பாக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தை இரட்டை இலக்கமாக உயர்த்தி, 5 ட்ரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும் என்றும், அவர் குறிப்பிட்டார்.

கடந்த 4 ஆண்டுகளாக தமது தலைமையிலான அரசு, இலகுவான வர்த்தகத்திற்கான நடைமுறைகளை மேற்கொண்டு, நடப்பு கணக்கு பற்றாக்குறையை தொடர்ந்து பராமரித்து வருவதாக கூறினார்.

வணீஜியா பவன் எனும் இந்த கட்டிடம் அடுத்தாண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என்றும், தனித்தனியாக செயலாற்றுவதை விட, துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் நல்ல பலனை எட்ட முடியும் என்றார்.

அரசின் மின்னணு சந்தையில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர விற்பனையாளர்கள பதிவு செய்திருப்பதாகவும், 8 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் இந்த முறையின்கீழ் விற்பனையாவதாகவும் கூறினார்.

தொழில்நுட்பம், வர்த்தக செயலாக்கத்தை எளிமைப்படுத்தியிருப்பதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். சரக்கு சேவை வரி வசூலிக்கப்படுவதால், வர்த்தகம் எளிதாக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டார்.

அன்னிய நேரடி முதலீடுகளும், அன்னிய செலாவணி பரிமாற்றமும் அதிகரித்திருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

புதிய இந்தியாவிற்கான தேவை ஒருங்கிணைந்த செயல்திட்டமே என்று எடுத்துரைத்த பிரதமர், மாநிலங்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பால், நாட்டின் ஏற்றுமதி வளரும் என்றார்.

உற்பத்தியாளர்கள் குறைகளே இல்லாத பொருட்களை தயாரிக்க ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று கூறிய பிரதமர், உற்பத்தியின்போது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்றும் அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் திரு.சுரேஷ்பிரபு, ஹர்தீப் சிங் பூரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

.................

குடியரசுத்தலைவர்:

குடியரசுத்தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் 3 நாடுகள் அரசுமுறை பயணத்தின் இறுதிகட்டமாக இன்று கியூபா சென்றடைந்தார். முன்னதாக, சான்டியோகாவில், அந்நாட்டு அதிபர் பீட்ரஸ் ஜான்சன் அவரை அன்புடன் வரவேற்றார்.

கியூபா நாட்டு புரட்சிக்கு வித்திட்ட பிரபல கவிஞர் ஜோஸ் மார்டியின் நினைவிடத்திலும், மறைந்த அதிபர் பிடல் காஸ்ட்ரோவின் நினைவகத்திலும் மரியாதை செலுத்துகிறார். இதனை தொடர்ந்து குடியரசுத்தலைவர், கியூபா நாட்டு தலைநகரான ஹவானா சென்றடைந்தார்.

.................

ஆளுநர்:

தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு நலத்திட்ட பணிகளை இன்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

இதன் ஒருபகுதியாக, அறிஞர் அண்ணா பேருந்து நிலைய வளாகத்தில், தூய்மை இந்தியா ரதம் மற்றும் விழிப்புணர்வு பேரணியை, இன்று தொடங்கி வைத்தார்.

சிறப்பு மருத்துவ முகாமை துவக்கி வைத்த ஆளுநர், அனைத்து துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியை பார்வையிட்டார். அண்ணாநகர் சமுதாய சுகாதார வளாகத்தையும் ஆளுநர் பார்வையிட்டார்.

நாமக்கல் பரமத்தி சாலையில் அமைந்துள்ள **PGP** கல்லூரியில், தூய்மை இந்தியா உறுதி ஏற்பு நிகழ்ச்சியிலும் ஆளுநர் பங்கேற்றார். மாநில அமைச்சர்கள் திரு.பி.தங்கமணி, டாக்டர்.சரோஜா உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மத்திய அரசின் நலத்திட்டங்களை ஆய்வு செய்யும் ஆளுனர், பொதுமக்களிடமிருந்து மனுக்களையும் பெற்றுக்கொள்கிறார்.

..................

நிவாரண உதவி:

தமிழகத்தில் அண்மையில் பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்த திருப்பூர், தேனி, புதுக்கோட்டை, கோவை, நெல்லை, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த 13 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்ச ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி இன்று உத்தரவிட்டுள்ளார்.

....................

துரைக்கண்ணு:

தமிழக அரசு அனைத்து நலத்திட்டங்களையும் முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக, மாநில வேளாண்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு தெரிவித்துள்ளார்.

தஞ்சையில், மாவட்ட சமூக நலத்துறை சார்பில் 713 பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் மற்றும் மகளிர் திட்டம் சார்பில், 228 பயனாளிகளுக்கு இரண்டு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசிய அவர், அனைத்து துறைகளிலும்

வளர்ச்சி பெற்ற மாவட்டமாக தஞ்சை மேம்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். தஞ்சை மாவட்டம் பசுமை விருதை வென்றது போல அனைத்து மாநில விருதுகளையும் பெற வேண்டும் என்றும் அவர் வாழ்த்தினார்.

....................

வேலுமணி:

அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு கல்வி சுற்றுலாவிற்காக அழைத்து செல்லப்பட உள்ள சென்னை பள்ளி மாணவ, மாணவிகள், மாநில நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணியை இன்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாக துறையின் முதன்மை செயலர் திரு.ஹர்மந்தர் சிங், சென்னை மாநகர ஆணையர் திரு.கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

...............

ஓ.எஸ்.மணியன்:

தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டில், கோ ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை இலக்கு 340 கோடி ரூபாய் அளவிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில கைத்தறி துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நவீனமயமாக்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் பொதிகை விற்பனை நிலையத்தை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர், கடந்த நிதியாண்டில், 316 கோடி ரூபாய்க்கு விற்பனை நடைபெற்றுள்ளதாக தெரிவித்தார்.

கோஆப்டெக்ஸ் கைத்தறி துணிகளின்மீது மக்களின் நம்பகத்தன்மை மேலும் அதிகரித்துள்ளதால், மக்கள் இதனை நாடி வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இளைஞர்களின் ரசனைக்கேற்றவாறு, நெசவாளர்கள் புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதற்கான நவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறிய அவர், வெளிநாட்டினர் கைத்தறி துணிகளை வாங்கி பயனடையும் வகையில், ஆன்லைன் வர்த்தகம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

ஓ.எஸ்.மணியன் தொடர்ச்சி:

தமிழர்கள் அதிகம் வாழும்பகுதிகளான சிங்கப்பூர், மலேசியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் கோஆப்டெக்ஸ் விற்பனை மையங்கள் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த விற்பனை மையத்தில் இந்தாண்டு புதுவரவாக எண்ணற்ற வடிவமைப்பில் காஞ்சிபுரம் பட்டு புடவைகள், மென்பட்டுகள், ஆர்கானிக் காட்டன் சேலைகள், மெத்தை விரிப்புகள் போன்ற அனைத்து ரக துணிகளுக்கும் 20 சதவீத தள்ளுபடி வழங்கப்படுகிறது.

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து, மேட்டூர் அணை 80 அடியை எட்டினால் அணை பாசனத்திற்கு திறக்கப்படும் என அமைச்சர், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கேள்வி சட்டம் ஒழுங்கு பற்றிய கேள்விக்கு அமைச்சர் பதில் அளிக்கையில்,

- - அமைச்சர் வாய்ஸ் - -

மாநில பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ் வளர்மதி, உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

...............

கிருஷ்ணகிரி:

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டரங்கில், அரசு தொழிற்பயிற்சி கல்லூரிகளுக்கு இடையிலான 3 நாள் மாநில தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று தொடங்கின.

மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.பாலகிருஷ்ண ரெட்டி, மாநில தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் திருமதி.நிலோபர் கபில் ஆகியோர் இப்போட்டிகளை துவக்கிவைத்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கதிரவன் உடனிருந்தார். 32 மாவட்டங்களை சேர்ந்த 500 மாணாக்கர் இப்போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

..............

சேலம்:

சேலம் பசுமை வழிச்சாலை திட்டத்திற்கு நிலம் வழங்குவோருக்கு ஒரு ஹெக்டேருக்கு அதிகபட்சமாக 9 கோடியே 40 லட்சம் ரூபாயும், குறைந்தபட்சமாக இருபத்தி ஒன்றரை லட்ச ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும் என்று சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரோகிணி தெரிவித்திருக்கிறார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த அவர், இழப்பீடு தொகை நிலத்திற்கு மட்டுமல்லாமல் அதில் இருக்கும் வீடு, கிணறு, மரங்கள் உள்ளிட்ட அனைத்திற்கும் வழங்கப்படும் என்றார். நிலம் உள்ள பகுதிக்கு ஏற்றாற்போல 3 மடங்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

.............

தரவரிசைப்பட்டியல்:

தமிழகத்தில் பொறியியல் பாடப்பிரிவு சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியல் வரும் 28ம் தேதி காலை வெளியிடப்படுகிறது. ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேருக்கான தரவரிசைப்பட்டியல் இதில் வெளியிடப்படும். அதனைத் தொடர்ந்து **B.E.** படிப்புகளுக்கான ஆன்லைன் கலந்தாய்வு, அடுத்த மாதம் 6ம் தேதி தொடங்குகிறது.

.............

ராமதாஸ்:

காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு கர்நாடகம் உறுப்பினர்களை பரிந்துரைக்க வலியுறுத்தி, தமிழக அரசு மத்திய அரசிற்கு போதிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத்தலைவர் டாக்டர்.எஸ்.ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுதொடர்பாக கர்நாடகத்திற்கு அளிக்கப்பட்ட கால அவகாசம், கடந்த 12ம் தேதியுடன் முடிவடைந்துள்ளதால், இதுகுறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர, அரசு முன்வரவேண்டும் என்று கோரினார்.

..............

மேட்டூர்:

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 50.59 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து 2 ஆயிரத்து 618 கனஅடியாக குறைந்துள்ளது. அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக 500 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

..............

காஞ்சிபுரம்:

காஞ்சிபுரம் பொன்னேரிக்கரை சென்னை - பெங்களுர் தேசிய நெடுஞ்சாலையில் காவல் உதவி மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொன்னையா இன்று திறந்து வைத்தார். இம்மையம் மூலம், நெடுஞ்சாலை பகுதியில் குற்றங்கள் குறையும் என மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சந்தோஷ் ஹதிமானி கூறியிருக்கிறார்.

............

காஞ்சிபுரம்:

காஞ்சிபுரம் அருள்மிகு வழக்கறுத்தீஸ்வரர் கோவில் பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருத்தேர் உற்சவம் இன்று நடைபெற்றது.

.............

கால்பந்து:

ரஷ்யாவில் நடைபெறும் உலகக்கோப்பை கால்பந்து போட்டிகளில் இன்று மாலை ஐந்தரை மணிக்கு பிரேசில் - கோஸ்டாரிகாவையும், இரவு எட்டரை மணிக்கு நைஜீரியா - ஐஸ்லாந்தையும், பதினொன்றரை மணிக்கு செர்பியா - சுவிட்சர்லாந்தையும் எதிர்கொள்கின்றன. முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டங்களில், குரேஷியாவும், பிரான்சும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறின.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.